ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1652/51 - 2010 මැයි 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.05.06

*1652/51 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 3 ஆவது பிரிவினதும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் ஆணைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகின்றதுமான அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாண சபையின் உள்ளூராட்சிமன்றங்களின் பரிபாலனத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவினதும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 252 ஆவது அத்தியாயமானமாநகர சபைகள் ஆணைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவின் கீழ் தென் மாகாணத்தின் மாகாண சபையின் நிதி திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும் போக்குவரத்து, நீர் விநியோகமும் வடிகாலமைப்பும், மின் சக்தி, பொறியியல் சேவைகள், சுகாதார சுதேச வைத்தியம் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய சான், விஜயலால் த சில்வா ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை மாநகர சபையின் நகராதிபதியாகிய திரு. சுபாவிக்கிரம மல்லிகா விதானாச்சிகே உப்புல் நிசான்த அவர்கள், மாத்தறை மாநகர சபையின் நகராதிபதியாக கருமமாற்றும் போது மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 277 ஆவது பிரிவினதும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்படுகின்ற விடயங்கள் சம்பந்தமாக பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இளைப்பாறிய (ஓய்வுபெற்ற) நீதிமன்ற உத்தியோகத்தராகிய திரு. எதிரிமுனி ஸமித் த சில்வா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*2. இன்னும், தென் மாகாணத்தின் மாகாண சபையின் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், போக்குவரத்து, நீர் விநியோகம், வடிகாலமைப்பு, மின்சக்தி, பொறியியல் சேவைகள், சுகாதாரம், தேசிய வைத்தியம் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய சான் விஜயலால் த சில்வா ஆகிய நான், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சிமன்றங்களின் பரிபாலனத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 277 (1ஆ) (1) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை மாநகர சபையின் நகராதிபதியாகிய திரு. சுபாவிக்கிரம மல்லிகா விதானாச்சிகே உப்புல் நிசான் த அவர்கள் மேற்குறித்த மாநகர சபையின் நகராதிபதியாக கருமமாற்றுவதை உடனடியாக நடைமுறையாகும் வண்ணம் இடைநிறுத்தம் செய்கின்றேன்.*

3. மேலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 277 (1ஆ) (1) ஆம் பிரிவின் கீழ் மாத்தறை மாநகர சபையின் நகராதிபதிப் பதவியில் கருமமாற்றிய திரு. சுபாவிக்கிரம மல்லிகா விதானாச்சிகே உப்புல் நிசான் த அவர்கள் அப்பதவியில் கருமமாற்றுவதை உடனடியாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளமையின் காரணமாக அவரது அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கருமங்களைச் செய்வதற்கும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தைக் கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 3 (அ) (1) ஆம் பிரிவினதும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1947 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 277 (1 ஆ) (i) ஆம் பிரிவின் பிரகாரம் மாத்தறை மாநகர சபையின் பிரதி நகராதிபதி பதவியில் கருமம் புரியும் திரு. தீகொட கமகே யசரத்ன அவர்களுக்கு உத்தரவிடப்படுகின்றது.

சான் விஜயலால் த சில்வா,
நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி,
போக்குவரத்து, வடிகாலமைப்பு, மின்சக்தி, பொறியியல்
சேவைகள், சுகாதார சுதேச வைத்தியம், நீர் விநியோகம் ஆகிய
விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்.
தென் மாகாண மாகாண சபை.

2010, மே 6.

5 - 481

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.